லல்லு பிரசாத் யாதவ் பிறந்த நாள்!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, ஜூன். 12- ராஷ்டிரிய ஜனதா தளக் கட்சியின் தேசியத் தலைவர் லல்லு பிரசாத் யாதவ் அவர்களின் பிறந்தநாளையொட்டி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பி உள்ளார்.

அதில்,"**மதச்சார்பின்மைக்கும் சமூக நீதிக்கும் தாங்கள் தொடர்ந்து பாடுபட்டு வருவது, நாடு முழுவதுமுள்ள ஜனநாயக மற்றும் முற்போக்குச் சக்திகளுக்கு உந்துதலாக உள்ளது. நீங்கள் நல்ல உடல் நலத்தோடும் மகிழ்ச்சியோடும் திகழ வாழ்த்துகிறேன்**" என்று குறிப்பிட்டுள்ளார்.

சாலைப் பயணங்களை கவனமுடன் மேற்கொள்வீர்!

ஓராண்டில் 22 குடும்பங்களுக்கு உதவித் தொகை - இதயம் கனக்கிறது!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜூன் 12 -

"ஓராண்டில் 22 குடும்பங்களுக்கு உதவித் தொகை கொடுத்த போது இதயம் கனக்கிறது, உயிரினும் மேலான உடன்பிறப்புகளுக்குத் துணையிருப்போம்" என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு : -

உயிரினும் மேலான உடன்பிறப்புகளுக்குத் துணையிருப்போம்!

ஓராண்டில் 22 குடும்பங்களுக்கு உதவித்தொகை கொடுத்த போது இதயம் கனக்கிறது.

உடன்பிறப்புகளே... உங்கள் ஒவ்வொருவருக்கும் – உங்கள் குடும்பத்திற்கும் துணை நிற்க வேண்டியது கழகத்தின் கடமை! ஆனால், அதைவிடப் பெருங்கடமையாக நான் கருதுவது: சாலைப் பயணங்களை நீங்கள் கவனமுடன் மேற்கொள்ள வேண்டும்.

உடன்பிறப்புகள் ஒவ்வொருவொருவர் மீது நானும்,உங்கள் குடும்பத்தினரும் வைத்துள்ள நம் பிக்கையைக் காத்து நலமுடன் வாழ வேண்டும்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

த.வெ.க. அரசின் நிர்வாகத் திறமையின்மையால்

தினசரி மின்வெட்டால் இருளில் தவிக்கும் மக்கள்!

அமைச்சரின் மழுப்பல் பேச்சு!

சென்னை, ஜூன் 12 - தமிழகம் முழுவதும் தின சரி மின்வெட்டு பிரச்சினை தலைவிரித்தாடும் நிலை யில், த.வெ.க. அரசின் நிர் வாக திறமையின்மையால் அவதியுறுகிறோம் என பொது மக்கள் குற்றச்சாட்டை முன் வைத்து வருகின்றனர்.

தமிழக வெற்றி கழகத் தின் தேர்தல் பிரசார பாடலில் 'நான் தன்னந்தனி ஆளு, நீ ஏளனமா பாரு, கொஞ் சம் நவுந்தேன்னா இங்க எட்டு கோடி பேரு,' என பாடல் தொடங்கும். தற் போது த.வெ.க.விற்கு வாக் களித்து ஆட்சியில் அமர வைத்த பின்னர் ஏன் வாக்களித்தோம் என தின சரி அந்த எட்டு கோடி பேரும் கேட்கும் அளவிற்கு மாநிலத்தில் ஏற்படும் மின் வெட்டு, பெண்களுக்கு எதி ரான வன்முறை சம்ப வங்களே சான்று.

அமைச்சரின் மழுப்பலான பதில்!

விஜய் தலைமையிலான அரசு ஆட்சி பொறுப்பேற்ற மிக குறுகிய காலத்திலேயே, ஒட்டுமொத்த மாநிலமும் கடுமையான அறிவிக்கப்ப டாத மின்வெட்டு பிரச்சி னையில் சிக்கித் தவித்து வருகிறது. தேர்தலின்பது, 'மாற்றம் தருவோம்,' என முழங்கிவிட்டு, தற்போது நிலவும் மின் நெருக்கடிக்கு தீர்வு காணாமல், மின்துறை அமைச்சர் சி.டி..ஆர்.நிர்மல் குமார் தொடர்ந்து மழுப்ப லான காரணங்களையும் கட்டுக்கதைகளையும் கூறி வருவது பொதுமக்களி டையே கடும் கொந்த ளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

அதே நேரத்தில், இந்த மின்வெட்டுகளுக்கு பின் னால் பல்வேறு நிர்வாக சீர் கேடுகளும், திட்டமிட்ட சதிகளும் இருப்பதாக அவர் கூறிவருகிறார். பொதுமக்க ளுக்கு தடையற்ற மின்சா ரம் வழங்க வேண்டியது தற்போதைய த.வெ.க. அர சின் முதன்மை கடமை. ஆனால், மின்துறை அமைச் சர் நிர்மல்குமார் மின் வெட்டு ஏற்படும் போதெல் லாம், முந்தைய திமுக ஆட்சியின் முறைகேடுகளை யும், மின்வாரியத்தின் கடன் சுமைகளையும் மட்டுமே திரும்ப திரும்ப பேசி வருகி றார்.

புதிய அரசு பொறுப் பேற்று ஒரு மாத காலம் ஆகிறது.

ஆனால் தொடரும் மின் வெட்டு பிரச்சினையை சரி செய்ய முடியாமல் திணறி வரும் மின்சாரத்துறை அமைச்சர் இன்னும் பழைய ஆட்சியை குறை கூறிக் கொண்டிருப்பது தவெக அரசின் மீதான நிர்வாகத் திற மை யின் மை யை யே காட்டுவதாக பொதுமக்கள் கருத்து தெரிவித்துள்ளனர். மேலும், 'ரீல்ஸ்' காட்டி ஆட் சிக்கு வந்துவிட்டு, ரியல் நிர் வாகத்தில் இந்த அரசு தோற்று விட்டதா என்ற பலத்த விமர்சனம் எழுந் துள்ளது.

அண்மையில் தொடரும் மின்வெட்டு பிரச்னையை சமாளிக்க தெரியாமல் மக் களை திசைத்திருப்ப தமிழக மின்வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் மின்வாரிய தரவுகளை கொண்ட ஹார்ட் டிஸ்க்குகள் திருடப் பட்டதாக கூறப்பட்டது.

அதன் பின்னர் அதில் எந்த ஆதாரபூர்வமான தட யங்களும் இல்லை என தேய்ந்து போனது ஒருபுறமி ருக்க, டெண்டர் முறைகே டுகளை காரணம் காட்டி புதிய திட்டங்கள் முடக்கப் பட்டு வருகின்றன.

முந்தைய சோலார் டெண்டர்களில் குளறுபடி கள் இருந்தால் அதற்கு காரணமானவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, மொத்த திட்டங்களையும் முடக்கி வைப்பது எந்த வகையில் நியாயம் என கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்றன.

அரசே திட்டமிட்டு மின்தட்டுப்பாட்டை உருவாக்குகிறது!

இந்த விவகாரம் மூல மாக உள்கட்டமைப்பை மேம்படுத்த புதிய டெண் டர்களை உடனே கோரா மல் காலம் கடத்துவது, இந்த மின் தட்டுப்பாட்டை அரசே திட்டமிட்டு உரு வாக்குவது போல உள்ள தாக சமூக ஆர்வலர்கள் கருத்துகளை தெரிவிக்கின்ற னர். அதேபோல், மின்மாற் றிகள் பழுதடைந்துள்ளன, மின்சுமை அதிகமாக உள் ளது எனத் தொழில்நுட்பக் காரணங்களை அமைச்சர் அடுக்கினாலும், அதைத் தடுக்க அரசு என்ன முன் னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்தது என்ற கேள்வி எழுகிறது.

கோடைகாலம் மற்றும் மின் தேவையின் உச்ச வரம்பை முன்கூட்டியே கணிக்கத் தவறியது ஏன்?. மின்வாரியத்தில் 70,000 பணியாளர்கள் பற்றாக் குறை இருப்பதாகக் கூறும் அமைச்சர், போர்க்கால அடிப்படையில் புதிய ஆட் களை நியமித்துத் தடை யற்ற மின்சாரத்தை உறுதி செய்யாமல், வெறும் புள்ளி விவரங்களை மட்டும் ஊட கங்களில் பேசுவது ஏன் என பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அரசின் பொறுப்பற்ற செயல்!

நீடிக்கும் தொடர் மின் வெட்டின் அவநிலையின் ஒரு பகுதியாக நேற்றைய தினம் கூட மாங்காடு, பூந்த மல்லி, ஆவடி, போரூர் போன்ற இடங்களில் மின் வெட்டு பிரச்சினை இருந்த தது.

இதுகுறித்து அமைச்சரி டம் கேள்விகளை முன் வைத்தால் ஆவடி போன்ற சில பகுதிகளில் நள்ளிரவில் மர்ம நபர்கள் மின் கம்பங் கள் மற்றும் மின்பெட்டி களில் உள்ள 'பியூஸ் கேரியர் களை' பிடுங்கிச் சென்று செயற்கையான மின் வெட்டை உருவாக்குவது சிசிடிவி காட்சிகளில் பதி வாகியுள்ளது.

அரசை அவமானப்படுத் தவும், மக்களைப் போராட் டத்திற்கு தூண்டவும் இத்த கைய சதி வேலைகள் நடக்கின்றன என்று கூறி சிலர் கைதும் செய்யப்பட் டுள்ளனர் என கூறுகிறார்.

ஆனால், எங்கோ ஒரு இடத்தில் நடக்கும் பியூஸ் திருட்டுகளை காரணம் காட்டி, தமிழகம் முழுவ தும் நிலவும் ஒட்டுமொத்த மின்வெட்டுப் பிரச்சினைக் கும் 'சதி' என்று முத்திரை குத்துவது பொறுப்பற்ற தன மானது.

அத்தகைய நபர்களைக் கட்டுப்படுத்துவதும் அர சின் கடமையே ஆகும். தமி ழகத்தில் ஏற்பட்டுள்ள மின் வெட்டு பிரச்சினைக்குக் கடந்த கால பிரச்சினை களையே பேசிக்கொண்டு இல்லாமல், அதனைச் சரி செய்ய வேண்டிய முழு பொறுப்பும் தற்போதைய த.வெ.க. அரசுக்கே உரியதா கும். எனவே, போர்க்கால அடிப்படையில் புதிய மின் மாற்றிகளை அமைப்பதும், நிர்வாகத் திறனை மேம்ப டுத்துவதும் மட்டுமே தற் போதைய இருள் சூழ்ந்த நிலைக்கு நிரந்தரத் தீர்வாக அமையும் என்பதில் எந்த வித மாற்றுக்கருத்துமில்லை.

முன்னாள் அமைச்சர் பெஞ்ஜமினுக்கு வாழ்த்துகள்!

அண்ணா உருவாக்கிய தாய்க் கழகத்திற்கு திரும்பி வரும் அனைவரையும் வரவேற்கிறேன்!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜூன் 12 -

அண்ணா உருவாக்கிய தாய்க் கழகத்திற்குத் திரும்பி வரும் அனைவரையும் வரவேற்கி றேன் என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

கழகத் தலைவர் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு :-

அண்ணா உருவாக்கிய தாய்க்கழகத்திற் குத் திரும்பி வரும் அனைவரையும் வரவேற் கிறேன்!

முன்னாள் அமைச்சர் திரு.பெஞ்ஜமின் அவர்களுக்கு வாழ்த்துகள்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதி

திருநாவலூர் கிழக்கு, மேற்கு ஒன்றியங்களில் வாக்காளர்களுக்கு நன்றி!

ஜி.ஆர்.வசந்தவேல் எம்.எல்.ஏ. தெரிவித்தார்!

உளுந்தூர்பேட்டை, ஜூன் 12 - கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், உளுந்தூர் பேட்டை சட்டமன்றத் தொகுதியில் வெற்றி பெற்ற ஜி.ஆர்.வசந்தவேல் எம்எல்ஏ தனக்கு வாக்களித்து வெற்றி பெற செய்த மக்களை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்து வருகிறார், அதன்படி திருநா வலூர் மேற்கு, கிழக்கு ஒன்றி யத்திற்கு உட்பட்ட சேந்த மங்கலம், சேந்தநாடு, மடப்பட்டு, கெடிலம், கள மருதூர், நன்னாரம், பிள்ளை யார் குப்பம், ஒரத்தூர், கில் லனூர், பெரும்பட்டு, செங்குறிச்சி பாதூர் உள் ளிட்ட பல்வேறு கிராமங்க ளில் மக்களை சந்தித்து நன்றி தெரிவித்தார்.

அப்போது அவர் பேசு கையில் உளுந்தூர்பேட்டை தொகுதியில் திராவிட முன் னேற்றக் கழகம் வெற்றி பெறுகிறோம் என்றால் அதற்கு காரணம் நான் கிடையாது, அதற்கு முழு காரணம் இங்கு வந்திருக்கக் கூடிய நீங்கள் தான், இந்த வெற்றி உங்கள் வெற்றி ஏனென்றால் தொடர்ந்து பல்வேறு கிராமத்திற்கு நான் பிரச்சாரத்திற்கு வந்தேன், மக்களை நேரில் சந்தித்து வாக்கு சேகரித்தேன், இந்த வெற்றிக்காக நீங்கள் அத் தனை பேரும் கடுமையாக உழைத்து இருக்கிறீர்கள், அதற்கு முதலில் என்னு டைய நன்றியை நான் மீண் டும் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த தொகுதி முழுவதும் சுற்றினோம், ஒவ்வொரு தெருவாக சென்றோம். எந்தெந்த தெருவுக்கு என்ன வேண்டும், ஒவ்வொரு வீடாக என்னென்ன தேவை என்பதை பார்த்து பார்த்து கடந்த ஐந்து வருடமாக செய்து கொடுத்துள்ளோம், அதே போல் நம்ப தொகுதி மட்டுமல்ல தமிழ்நாட்டில் வேற எந்த தொகுதியாக இருந்தாலும் திராவிட மாடல் நல்லாட்சியில் கழ கத் தலைவர், சமூக நீதி காவ லர், திராவிட நாயகர், அப் போதைய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் இளைஞர்களின் எழுச்சி நாயகர், அப்போதைய தமிழக துணை முதல்வர், தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பல்வேறு எண் ணற்ற மக்கள் நல திட்டங் களை நிறைவேற்றினார்கள்.

ஆகவே மீண்டும் நம் முத் தமிழறிஞர் கலைஞர் ஆட்சி, நம் தலைவர் தலைமையில் மீண்டும் நம் தலைவர் அவர் கள் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான் என்று மீண்டும் பதிவேற் கின்ற நாள் வெகு தூரத்தில் கிடையாது, நாம் அனைவ ரும் ஒன்றிணைந்து அதை செய்து காட்டுவோம் என்று கூறிக்கொண்டு எனக்கு இந்த வெற்றியை தேடித் தந்த உளுந்தூர்பேட்டை தொகுதி மக்கள், கழக நிர்வா கிகள், கூட்டணி கட்சி நிர் வாகிகள் என உங்கள் அத் தனை பேருக்கும் மீண்டும் என் நன்றியை கொள்கிறேன் என ஜி.ஆர்.வசந்தவேல் எம்.எல்.ஏ. கூறினார்.

இதில் திருநாவலூர் மேற்கு ஒன்றிய கழக செய லாளர் கே.வி.முருகன் உள் ளிட்ட கழக நிர்வாகிகள், மற்றும் கூட்டணி கட்சி களை சேர்ந்த நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

புதுச்சேரி தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தலில்

தி.மு.க. வேட்பாளரை வெற்றி பெறச் செய்வது நமது கடமை!

செயல்வீரர்கள் கூட்டத்தில் தீர்மானம்! மாநில அமைப்பாளர் இரா.சிவா தலைமை!

புதுச்சேரி, ஜூன் 12 - தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. போட்டியிடுவது உறுதியா கிவிட்ட காரணத்தால் தலைமைக் கழகத்தால் நிறுத்தப்படும் வேட்பா ளரை வெற்றி பெற வைப் பது என்று தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

தட்டாஞ்சாவடி தொகுதி திமுக செயல்வீரர்கள் கூட் டம் அத்தொகுதிக்கு உட் பட்ட செயிண்ட்பால்பேட் பகுதியில் உள்ள தி.மு.க. அலுவலகத்தில் நடந்தது.

மாநில அமைப்பாளர் இரா.சிவா தலைமையில் நடைபெற்ற கூட்டத்திற்கு கழக சட்டமன்ற உறுப் பினர்கள் அ.செந்தில் (எ) ரமேஷ், விக்னேஷ் கண்ணன், தொகுதி பொறுப்பாளரும், மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளருமான டாக்டர் ரோ.நித்திஷ் ஆகி யோர் முன்னிலை வகித்தனர்.

தொகுதி செயலாளர் ஆறுமுகம் வரவேற்று பேசி னார்.

கூட்டத்தில் மாநில அமைப்பாளர் இரா. சிவா பேசியதாவது: -

தமிழகத்தில் விசில் சத் தத்தில் நாம் ஏமாந்துவிட் டோம். இந்தியாவிற்கே முன்மாதிரி மாநிலமாக தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு சென்ற தி.மு.க. தலைவர் அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்த கொளத்தூரில் வெற்றி வாய்ப்பை இழந்துள்ளார். அதற்கும் விசில்தான் கார ணம். விசில் சத்தம் கொஞ் சம், கொஞ்சமாக அடங்க தொடங்கி மக்கள் தெளி வாகி வருகின்றனர். தமிழ கத்தில் டயலாக் பேசும் முதல்வர் ஆட்சி புரியும் அவலம் ஏற்பட்டுள்ளது.

அதுபோல் வில்லியனூர் தொகுதியில் 600 கோடி ரூபாய் அளவிற்கு பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தினேன். அதன் காரணமாக மக்கள் எனக்கு வாக்களிப்பார்கள் என்று நம்பி இருந்தேன். ஆனால் மக்கள் கவர்ச்சிக்கு ஆசைப் பட்டு குறிப்பாக பெண்கள் அதிகளவில் விசிலுக்கு வாக் களித்த காரணத்தால் நான் வெற்றி வாய்ப்பை இழந் தேன்.

தி.மு.க.வை எதிர்த்த அ.தி.மு.க. இன்று கட்சியை காப்பாற்றினால் போதும் என்ற நிலைக்கு வந்துவிட் டது. தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. போட்டியிடுவது உறுதியாகிவிட்டது. தலை வர் யாரை வேட்பாளராக நிற்க வைக்கிறாரோ அவரை வெற்றி பெற வைக்க வேண் டும். அதற்காக நாம் அனை வரும் ஒருங்கிணைந்து ஒற்றுமையாக திட்டமிட்டு கடுமையாக உழைக்க வேண்டும். மக்களை சந்திக் கும்போதே அவர்களின் நம்பிக்கைக்கு ஏற்ற வகை யில் நட்சத்திர அந்தஸ் தோடு செல்ல வேண்டும். கொள்கை, இன உணர்வு, மொழி உணர்வுள்ள மாபெ ரும் இயக்கம் தி.மு.க. இடைத்தேர்தலில் யார் எதிர்த்து போட்டியிட்டா லும் கவலைப்படாமல் நாம் அனைவரும் தலைமைக் கழ கத்தின் வழிகாட்டுதலோடு தீவிரமாக மக்களை சந்தித்து வாக்கு சேகரிக்க வேண்டும். வெற்றி பெற்றே ஆக வேண் டும் என்ற நோக்கத்தில் அனைவரும் பணியாற்ற வேண்டும்.

இவ்வாறு பேசினார்.

கூட்டத்தில், பொதுக்குழு உறுப்பினர் தங்கவேலு, மாநில மகளிர் அணி அமைப் பாளர் காயத்ரி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் மதிமாறன், மாநில துணை அமைப்பா ளர்கள் பிரகாஷ், சுரேஷ், தொகுதி அவைத்தலைவர் கணேசன், தொகுதி நிர்வாகி கள் பழநிசாமி, குடியரசு, திரு லோகு, சுகுணா, இளங்கோ, சங்கர், முருகையன், சந்தோஷ், பாலாஜி, முத்துகுமார், விக்டோரியா, நடராஜன், ராமமூர்த்தி, அய்யனார், வெங்கடேசன் உள்ளிட்ட 200 கிளைக் கழக நிர்வாகி கள் கலந்து கொண்டனர்.

முன்னதாக இடைத்தேர் தலில் தலைமைக் கழகத் தால் நிறுத்தப்படும் வேட் பாளரை கண்டிப்பாக வெற்றி பெற செய்வது என்று தீர்மானம் ஒருமன தாக இயற்றப்பட்டது.

புதுச்சேரி தட்டாஞ்சாவடி தொகுதி தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் அத்தொகுதிக்கு உட்பட்ட செயிண்ட்பால்பேட் பகுதியில் உள்ள தி.மு.க. அலுவலகத்தில் நேற்று (11.06.2026) நடைபெற்றது. மாநில அமைப்பாளர் இரா.சிவா தலைமையில் நடைபெற்ற கூட்டத்திற்கு கழக சட்டமன்ற உறுப்பினர்கள் அ.செந்தில் (எ) ரமேஷ், விக்னேஷ் கண்ணன், தொகுதி பொறுப்பாளரும், மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளருமான டாக்டர் ரோ. நித்திஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தொகுதி செயலாளர் ஆறுமுகம் வரவேற்று பேசினார்.